## சென்னை மெட்ரோ ரயில் நிலைய

# தலைமை அலுவலகத்தில் சோலார் மின் தகடுகள் அமைப்பு

சென்னை, செப். 7- மெட்ரோ ரயில் நிர்வாகம் வெளியிட்ட செய்திகுறிப்பு:

பூமியில் கார்பனை குறைத்தல், பசுமையை காத்தல் உள்ளிட்டவைகளை முக்கிய நோக்கமாக கொண்டு அரசு செயல்பட்டு வருகிறது. அந்த வகையில் சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் பசுமையை காக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் மெட்ரோ ரயில் தலைமை அலுவலகத்தின் மேற்கூரையில் சோலார் மின்தகடுகள் அமைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே 1 மெகாவாட் மின்சக்தி கிடைக்கக்கூடிய வகையில் சோலார் தகடுகள் கார் நிறுத்தகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலைய தலைமை அலுவலகத்தில் 350 கிலோவாட் மின்சாரம் கிடைக்கும் வகையில் சோலார் தகடுகள் அமைக்கப்பட்டுள்ளது. இதனால், 45 ஆயிரம் யூனிட் மின்சாரம் மாதம் தோறும் கிடைக்கும். ஆண்டுக்கு 5 லட்சம் யூனிட் மின்சாரம் கிடைக்கும். இதனால், ஆண்டு தோறும் ரூ.19 லட்சத்து 50 ஆயிரம் சேமிக்க முடியும். ஏற்கனவே, 1.35 லட்சம் யூனிட் மின்சாரம் மாதம் தோறும் உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால், ரூ.21.6 லட்சம் சேமிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த ஆண்டு இறுதிக்குள் 6.0 மெகாவோல்ட் சூரிய ஒளி மின்திட்டத்திற்கான பணிகள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.